311 தொலைபேசி இலக்க சேவை புகுத்தப்பட்ட பின்னர், மாநகராட்சி மன்றத்திடம் விபரமறிவதும், சேவைகோரி வேண்டுகோள் விடுப்பதும் பெரிதும் இலகுவான காரியங்கள் ஆகியுள்ளன. மாநகரவாசிகளும், தொழிலகங்களும், மாநகரத்துக்கு வந்துசெல்வோரும் ஓர் இலகுவான தொலைபேசி இலக்கத்தையும், எளிதான இணையத்தளத்தையும் பயன்படுத்தி, மாநகர சேவைகளையும், செயற்பாடுகளையும், விபரங்களையும் அன்றாடம் 24 மணித்தியாலங்களும், கிழமையில் ஏழு நாட்களும் பெற்றுக்கொள்ளலாம்.

மொழி இணைப்புச் சேவை மூலம் வழங்கப்படும் பேச்சு-மொழிபெயர்ப்பாளர்களைப் பயன்படுத்தி 170 மொழிகளில் விபரங்களை முன்வைக்க வல்லதாக 311 தொலைபேசி இலக்க சேவை விளங்குகிறது. நீங்கள் ஆங்கிலம் பேசச் சிரமப்பட்டால் அல்லது ஆங்கிலம் பேசச் சிரமப்படும் எவரையும் அறிந்தால், நீங்கள் பேசும் எந்த மொழியிலும் உதவிக்கு அழைக்கவும்: 311. நீங்கள் தொலைத்தட்டெழுத்துப்பொறி பயன்படுத்துபவர் என்றால், எங்களை அழைக்கவும்: 416-338-0889.

உலகிலேயே மிகுந்த பன்பண்பாட்டு மாநகரங்களுள் ஒன்றாக விளங்குவது குறித்து ரொறன்ரோ மாநகரம் பெருமைப்படுகிறது. மாநகர வாய்ப்புவசதிகளை எத்தனை மொழிகளில் வழங்க முடியுமோ அத்தனை மொழிகளிலும் வழங்குவதற்கு மாநகரம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. தற்பொழுது auto-translation (Google translate) என்பதைப் பயன்படுத்தி 23 மொழிகளில் இப்பக்கங்களை நீங்கள் புரட்டிப் பார்க்க முடியும். எனினும் சில பகுதிகளின், கூறுகளின் மொழிபெயர்ப்புகள் இடம்பெறவில்லை. வேறொரு மொழியில் சேவைகோரி வேண்டுகோள் விடுப்பதற்கு அல்லது பொதுப்படையாக விசாரிப்பதற்கு, அழைக்கவும்: 311.